**SC NO.27/2020** **Date: 07.03.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. பூபதி என்ற Pw4 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. பூபதி**

**த/பெ, - திரு. தேவராஜ்**

**வயது - 44/2025**

**தொழில் - குடிநீர் விற்பனையாளர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பெரும்புதூர் வட்டம் திருமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன் குடிநீர் விற்பனையாளராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் குடிநீர் சப்ளை செய்வதற்காக நான் காவல் நிலையம் சென்றிருந்தேன் அப்போது ஆய்வாளர் என்னிடம் எந்தெந்த இடங்களுக்கு தண்ணீர் சப்ளை செய்கிறாய் என்று கேட்டு சம்பவம் பற்றி கேட்டார் அது பற்றி தெரியாது என்று சொல்லிவிட்டேன் என்னிடம் அவர் கையொப்ப மட்டும் பெற்றுக் கொண்டார். போலீசார் விசாரிக்கவில்லை

அரசு தரப்பில் சாட்சியை பெரல்ஸ் சாட்சியாக அறிவிக்க கோரி என் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்

கடந்த 2019 ஆம் வருடத்தில் நீங்கள் சுங்குவார்சத்திரத்தில் சொந்தமாக டிராவல்ஸ் வைத்து நடத்தி வந்ததாகவும் என்னிடம் செல்வம் என்பவர் டிரைவராக வேலை செய்து வந்ததாகவும் அவர் ஃபாக்ஸான் கம்பெனியில் வேலை ஓட்டி வந்ததாகவும் அதே கம்பெனியில் கேரள மாநிலத்தை சேர்ந்த சபரிநாதன் என்பவர் எலக்ட்ரீஷியன் ஆக சுங்குவார்சத்திரத்தில் தங்கி வேலை செய்து வந்ததாகவும் அவர் தங்கி உள்ள வீட்டின் கீழே உங்களுடைய டிரைவர்

செல்வம் மற்றும் சில நபர்கள் தங்கி வந்தார்கள் என்றும் 14.4.2019 ஆம் தேதி தமிழ் புத்தாண்டு அன்று இரவு செல்வம் மற்றும் அவரிடம் தங்கி இருந்தவர்களுடன் மது அருந்தி விட்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்களை சபரிநாதன் போய் சண்டையை தடுத்தார் என்றும் அதனால் செல்வம் தவறி கீழே விழுந்துள்ளார் என்றும் இதில் செல்வத்திற்கு மூக்கில் காயம் ஏற்பட்டது என்றும் உடனே சபிரிநாதன் செல்வத்தை சிகிச்சைக்காக திருபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்றும் இரண்டு நாள் கழித்து செல்வம் மற்றும் அவரது உறவினர்களான யுவராஜ் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும்படி சொன்னதால் தண்டலம் சவிதா மருத்துவமனைக்கு செல்வத்தை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும் இது சம்பந்தமாக செல்வமும் அவர் உறவினர்களும் தொடர்ந்து சபரிநாதன் பணம் கேட்டு பிரச்சினை செய்தபோது அவர் இரண்டு முறை பணம் கொடுத்துள்ளார் என்றும் செல்வம் குடித்துவிட்டு என்னிடம் வேலைக்கு சரியாக வராமல் இருந்தார் என்றும் அதனால் நான் செல்வத்தை வேலையில் இருந்து நிறுத்தி விட்டேன் என்றும் 27/4/2019 ஆம் தேதி மாலையில் சபரிநாதன் எனக்கு போன் செய்து செல்வம் கிட்னி பெயிலியரால் இறந்து விட்டதாகவும் அதற்கு சபரிநாதன் தான் காரணம் என்று தவறாக நினைத்துக் கொண்டு அவருடைய சொந்தக்காரர்கள் ராஜ்குமாரும் வெங்கடேசனும் ஃபாக்ஸ்கான் கம்பெனி முன்னாடி வந்து பணம் தரும்படி கேட்டு மிரட்டி அவரது பைக்கில் அவரை அழைத்து செல்வதாக எனக்கு ஃபோனில் தகவல் சொன்னார் என்றும் இதைப் பற்றி நான் சாமிநாதன் தம்பி விஸ்வநாதனுக்கு தகவல் கொடுத்தேன் என்றும் பின்பும் மாம்பாக்கம் ஜே கே குவாரிக்கு செல்லும் வழியில் சுமார் மாலை ஆறு முப்பது மணிக்கு சபரிநாதன் கொலை செய்திருப்பதாக விஸ்வநாதன் மூலம் தகவல் தெரிந்தவுடன் சபரிநாதன் உடலை நீங்கள் பார்த்துவிட்டு ஸ்வநாதனுக்கு தமிழில் எழுத தெரியாத காரணத்தால் அவர் தமிழில் சொல்ல நான் புகாரை எழுதி படித்து காண்பித்து சரியாக இருந்தது என்றும் மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு காவல் நிலையத்தில்

புகார் கொடுத்தேன் என்றும் தற்போது குற்றவாளிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல.

மறுவிசாரணை இல்லை